SEWAFINANCE

# சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்களுக்கான

# கொள்கை விளக்கங்கள்


**Sewa Lanka Community Financial Services Limited**
263/A High Level Road, Kirulapane,
Colombo – 5,
Sri Lanka.

SEWA FINANCE

# சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்களுக்கான

# கொள்கை விளக்கங்கள்

**Sewa Lanka Community Financial Services Limited**
263/A High Level Road, Kirulapane,
Colombo – 5,
Sri Lanka.

உள்ளடக்கம்


1.00 **அங்கத்தவர்கள், அளவு, ஆளுகை, முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை.** 2

- 1.01 சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள் - சங்கங்கள் (Community Based Organizations - CBO). 2
- 1.02. அங்கத்துவம் 2
- 1.03 சங்கத்தின்(CBO) அளவு. 3
- 1.04 சங்கங்களிடம்(CBO) இருக்கும் உப குழு. 3
- 1.05 சங்கங்களின்(CBO) ஆளுகை. 3
- 1.06 முகாமைத்துவம். 4
- 1.07 கணக்கியல் முறைமைகள். 4
- 1.08 சங்கங்களின்(CBO) உப சட்டங்கள். 4
- 1.09 சங்கங்களின்(CBO) மாதாந்தக் கூட்டங்கள். 5
- 1.10 உப குழுக்களின் வாராந்த கூட்டங்கள். 5

2.00 **சங்கங்களின்(CBO) சேமிப்புத் திட்டங்கள்.** 6

- 2.01 சேமிப்பை அணிதிரட்டுவதன் முக்கியத்துவம். 6
- 2.02 கட்டாய சேமிப்பு. 6
- 2.03 பங்குகளுக்கான சேமிப்பு. 7
- 2.04 தன்னிச்சையான சேமிப்பு. 7
- 2.05 அவசர நிலை சேமிப்புகள்/ஏனைய சேமிப்பு முறைகள். 7
- 2.06 சேமிப்புகளின் வைப்பு 7
- 2.07 சேமிப்புகளை மீளப்பெறல் 7
- 2.08 சேமிப்புகளை மீளளித்தல். 8
- 2.09 பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் 8
- 2.10 சேமிப்புத் திட்டங்கள் தொடர்பான பதிவுகளைப் பேணுதல். 8
  - 2.10.1 சேமிப்புப் பதிவுப் புத்தகம் 8
  - 2.10.2 குழுக்களிடம் இருந்து சேமிப்புகளை சேகரித்தல் 8
  - 2.10.3 காசுப் புத்தகம். 8
  - 2.10.4 பொது ஏடு. 8
  - 2.10.5 மாதாந்த அளிக்கை. 8

3.00 **நுண் கடன்** 9

- 3.01 கடன் வழங்கல் கொள்கைகளும் நெகிழ்ச்சி காட்டப்படாதவைகளும். 9
- 3.02 அங்கத்தவர்களிடம் இருந்து கடன் பெறுபவர்களைத் தெரிவு செய்தல். 9
- 3.03 ஆரம்ப கடனின் அளவு. 9
- 3.04 தொடர்ச்சியான கடன்கள். 10
- 3.05 கடன்களின் கால எல்லை 10
- 3.06 கடனுக்கான வட்டி. 10
- 3.07 கடனுக்கான உத்தரவாதம் 10
- 3.08 கடன் விண்ணப்பத்துக்கான கோட்பாடுகள், அனுமதி மற்றும் கடன் வழங்குதல் 10
- 3.10 கடன் விண்ணப்பம். 11
- 3.11 கடன் பெற்றுக் கொள்வதற்கான அனுமதி. 11
- 3.12 கடன் தொடர்பான மீளாய்வு. 11
- 3.13 கடன் தொகையை வழங்கல். 12
- 3.14 கடன் வழங்கலை மேற்கொள்ள தேவையான கால வரையரை. 12
- 3.15 கடன் கடந்த கொடுப்பனவுகள் மற்றும் தவறான கடன் முகாமைத்துவம். 12

4.00 வங்கிக் கணக்குகளும் அது தொடர்பான வழிகாட்டல்களும். 13

4.01 வங்கிக் கணக்குகள். 13
4.02 வங்கிக் கணக்குகளின் நடைமுறைகளும் கையொப்பதாரிகளை மாற்றுதலும். 13
4.03 காசோலைப் புத்தகத்தின் பொறுப்பாளர். 13
4.04 பணத்தினை மீளபெறுதல். 13
4.05 கையிருப்பில் பணத்தை வைத்திருப்பது தொடர்பான பொறுப்பு. 13
4.06 பற்றுச் சீட்டு(ரசீது). 13

5.00 சங்கங்களின்(CBO) புத்தகங்களும் கணக்குகளும். 14

6.00 சேவா மாவட்டத்திற்கு சங்கங்களிடம்(CBO) இருந்து வரும் அறிக்கைகள். 16

7.00 மாதிரிப் படிவங்கள் 17

7.01 சேமிப்பு மற்றும் வரவு இடாப்பு (பின்னிணைப்பு 1). I
7.02 கடன் விண்ணப்பப் படிவம் (பின்னிணைப்பு 2) II-III
7.03 உறுதிப்பத்திரம் (பின்னிணைப்பு 3) IV
7.04 கடன் உடன்படிக்கை மாதிரிப் படிவம் (பின்னிணைப்பு 4) V-VI
7.05 கடன் தொகை வழங்கல் தொடர்பான இடாப்பு (பின்னிணைப்பு 5) VII
7.06 சங்கங்களுக்கான(CBOs) அங்கத்துவ விண்ணப்பங்கள் (பின்னிணைப்பு 6) VIII
7.07 அங்கத்தவர் ரீதியில் மாதாந்த கட்டாய சேமிப்பு அறிக்கை (பின்னிணைப்பு 7) IX
7.08 பற்றுச் சீட்டு மற்றும் கொடுப்பனவு அறிக்கை (பின்னிணைப்பு 8) X-XI
7.09 வங்கி மீதிச் சான்றிதழ் (பின்னிணைப்பு 9) XII
7.10 மாதாந்த கட்டாய சேமிப்பு அறிக்கை (பின்னிணைப்பு 10). XIII
7.11 மாதாந்த கடன் கண்காணிப்பு அறிக்கை (பின்னிணைப்பு 11). XIV
7.12 மாதாந்த கடன் வழங்கல் அறிக்கை (பின்னிணைப்பு 12). XV
7.13 கடன் விடுவிப்பு அட்டவணை (பின்னிணைப்பு 13). XVI
7.14 சங்கத்தின்(CBO) சாரம்ச நிலை (பின்னிணைப்பு 14). XVII
7.15 மாதாந்த வெளிக் கடன் தரத்தைப் பகுப்பாய்வு செய்தல் (பின்னிணைப்பு 15). XVIII
7.16 பற்று மற்றும் கொடுப்பனவு அறிக்கைகள் (பின்னிணைப்பு 18). XIX
7.17 வருமான மற்றும் செலவுகள் பற்றிய அறிக்கைகள் (பின்னிணைப்பு 19). XX
7.18 ஐந்தொகை (பின்னிணைப்பு 20). XXI

# கொள்கை வழிகாட்டல்கள்

சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்களுக்கான (CBO) கொள்கை வழிகாட்டல்கள்.

1.00 அங்கத்தவர்கள், அளவு, ஆளுகை, முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை.

1.01 சமூகத்தை அடிப்டையாகக் கொண்ட நிறுவனங்கள் (CBO) – சங்கங்கள்

சங்கங்கள்(CBO) வறிய ஆனால் பொருளாதார ரீதியில் உயிர்ப்பான சனத்தொகையினருக்கு குறிப்பாக இலங்கையில் உள்ள பெண்களுக்கு உரிய நிறுவனங்களாகும். சங்கங்கள்(CBO) ஒரு சட்டரீதியான அடிப்படையில் அமைந்திருக்கும். அதாவது அவை கீழே தரப்பட்டுள்ள ஏதாவதொரு அதிகாரமுடைய நிறுவனமொன்றில் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

| சங்கங்களின்(CBO) வகை | சட்டரீதியான நிறுவனங்கள் |
|---|---|
| • சேவா லங்கா சங்கங்கள் | சமூக சட்டம், சங்கங்கள், கட்டளைச் சட்டம். |
| • கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் | கிராமிய அபிவிருத்தி அமைச்சு. |
| • பெண்கள் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் | கிராமிய அபிவிருத்தி அமைச்சு |
| • கூட்டுறவுச் சங்கங்கள் | 1972 – 5ம் இல கூட்டுறவுச் சங்க சட்டம் |
| • பெண்கள் சங்கங்கள் | பெண்கள் பணியகம் (அரச) |
| • விவசாயிகள் சங்கங்கள் | கமநல சேவைகள் திணைக்களம் |
| • விவசாயிகள் கம்பனிகள் | 1982 - 17ம் இல கம்பனிகள் சட்டம் |
| • மக்கள் கம்பனிகள் | 1982 – 17ம் இல கம்பனிகள் சட்டம் |
| • நலன்புரிச் சங்கங்கள் | சங்கங்கள் கட்டளைச் சட்டம், சமூக சட்டம். |

பதிவு செய்யப்படும் நிறுவனங்களுடன் சங்கங்கள்(CBO) தமது நிறுவன யாப்பை செயற்படுத்த அனுமதியையும் பெற்றுக் கொண்டிருக்கும். ஏற்றுக் கொள்ளக் கூடிய வட்டி வீதத்தில் அதனது அங்கத்தவர்களுக்கு சுய தொழில் அடிப்படையில் அல்லது வருமான அதிகரிப்பு ரீதியில் கடன் வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றை அமுல்படுத்த ஆணையொன்றினையும் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் ஏனைய நிறுவனங்களிடம் இருந்து கடனைப் பெற்றுக் கொள்ளவும் அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

1.02 அங்கத்துவம்.

சங்கங்களின்(CBO) அங்கத்துவத்தைப் பெறுபவர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

அ. இலங்கையிலுள்ள வறிய சமூகத்தினரைச் சேர்ந்தோராயிருப்பதுடன் பொருளாதார ரீதியில் உயிர்ப்பாகவும் இருக்க வேண்டும்.

ஆ. அங்கத்தவர்கள் அக்கிராமத்தில் நிரந்தரமாக வசிப்போராக இருக்க வேண்டியதுடன் சமூக நடைமுறைகளிலும் சமூகப் பொருளாதாரப் பின்னணியிலும் ஒரே மட்டத்தில் இருக்க வேண்டும்.

இ. அங்கத்தவர்களின் வயதெல்லை 18 – 60 ஆக இருக்கவேண்டும்.

ஈ. நிறுவப்பட்ட சேமிப்புக் குழு ஒன்றின் அங்கத்தவர்கள் சங்கத்தினால்(CBO) நேரடியாகக் கண்காணிக்கப்படுவர்.

உ. ஒரு குறிப்பிட்ட சங்கத்தில்(CBO) அங்கத்துவத்தைக் கொண்டிருக்கும் அங்கத்தவர் ஒருவர் இன்னுமோர் சங்கத்தில்(CBO) அங்கதத்தவராக இருக்க முடியாது.

ஊ. சேவா லங்கா மன்றதிலன்றி வேறு ஒரு நிறுவனத்திடம் இருந்தும் அங்கத்தவர்கள் நுண்கடன் வசதிகளைப் பெற மாட்டார்கள்.

எ. ஒழுக்கம் தவறுபவர்களுக்கு அங்கத்தவராவதற்கு சந்தர்பமளிக்கப்பட மாட்டாது.

ஏ. சங்கத்தின்(CBO) யாப்பினால் அல்லது உருவாக்கப்படும் துணைச் சட்டம் ஒன்றினால் தீர்மானிக்கப்பட்டபடி ஒவ்வொரு அங்கத்தவருக்கும் அங்கத்துவ கட்டணமொன்று அறவிடப்படும்.

## 1.03 சங்கத்தின்(CBO) அளவு.

நுண் நிகழ்ச்சித்திட்ட மொன்றை மேற்கொள்ள வேண்டுமானால் சங்கத்தின்(CBO) அளவு குறிப்பிடத்தக்க அளவில் இருக்க வேண்டும். சிறிய அளவிலான சங்கத்தினால்(CBO) இவற்றைச் சிறந்த முறையில் மேற்கொள்ள முடியாது அதாவது அதிக செலவு செய்ய வேண்டியிருக்கும் என்பதுடன் கள உத்தியோத்தரின் நேரமும் விரையமாகும். மிகப் பெரிய அளவில் உள்ள சங்கங்களை(CBO) முகாமைத்துவம் செய்வது கடினமாக இருக்கும். இவ்வாறு இவை பெரிய அளவில் இருக்கும் போது கூட்டங்களின் போது அங்கத்தவர்களின் பங்குபற்றலானது வாடிக்கையாளர்கள் என்ற நிலைக்குத் தள்ளப்படும். அத்துடன் கூட்டங்கள் தலைவர்களாலோ அல்லது கள உத்தியோத்தராலோ கட்டுப்படுத்தப்படும் ஒரு செயற்பாடாக மாறிவிடும். இந்நிலையானது கூட்டங்களுக்கு குறைவான அங்கத்தவர்களின் வரவிற்கு வழிவகுப்பதுடன் குறைவான மீளச் செலுத்தலுக்கும் வழிவகுக்கும். இவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது சங்கத்தின்(CBO) அளவு பொருத்தமானதாக இருக்க வேண்டியதுடன் இதனால் இது செலவுச் சுருக்கமானதாகவும் இருக்கும். அத்துடன் அங்கத்தவர்கள் சிறப்பான முறையிலும் பங்கு பற்றக் கூடியதாகவும் இருக்கும். எனவே ஆகக் குறைந்து 40 அங்கத்தவர்களாக அல்லது உச்ச அளவாக 60 அங்கத்தவர்கள் சங்கம்(CBO) ஒன்றில் இருப்பது பொருத்மானதாக இருக்கும்.

## 1.04 சங்கத்தினுள்(CBO) இருக்கும் உப குழு.

5 தொடக்கம் 7 பேரைக் கொண்ட உபகுழுக்களைக் கொண்ட கோட்பாடு ஒன்று இருப்பது வினைத்திறன் வாய்ந்த நுண் நிதி நிகழ்ச்சித் திட்டமொன்றுக்கு மிகவும் அவசியமானது. ஒரு உப குழு ஒன்றுக்கான நியமம் பின்வருமாறு, உபகுழுவிலுள்ள அங்கத்தவ்கள் சிறப்பான முறையில் தீர்மானங்களை மேற்கொள்வதில் பங்குபற்ற முடியும். இதன் மூலம் கூட்டங்களில் பங்குபற்ற அவர்களுக்கு உள்ள விருப்பம் அதிகரிக்கும் உயிர்ப்பான பங்குபற்றல் இல்லாமல் போகும் பட்சத்தில் அங்கத்தவர்களுக்கு கூட்டங்களில் பங்குபற்ற உள்ள விருப்பம் குறைவடையும். இதன் மூலம் குழுச் செயற்பாடுகளில் அவர்களுக்கு உள்ள ஈடுபாடு இல்லாது போவதுடன் அக்குழுவானது செயலற்றதாகிவிடும். மேலும் ஒரு உப குழுவானது நல்ல முறையில் கண்காணிக்கப்படவும் முகாமைத்துவம் செய்யப்படவும் முடியும்.

உப குழுவிலும், சங்கங்களிலும்(CBO) ஆண்களையும் பெண்களையும் கொண்ட அமைப்புகளாக இருப்பது அனுமதிக்கப்படுகிறது.

## 1.05 சங்கத்தின்(CBO) ஆளுகை.

அ. ஒவ்வொரு சங்கமும்(CBO) அவற்றினது யாப்பிற்கு ஏற்ப முகாமைத்துவ/நிறைவேற்றுக் குழுக்களை தேவையான எண்ணிக்கையில் கொண்டிருக்கும். ஒவ்வொரு சங்கமும்(CBO) தலைவரையும், செயலாளரையும் மற்றும் ஒரு காசாளரையும் கொண்டிருக்கும்.

ஆ. இரண்டு வருட காலத்திற்கு பதவியில் இருக்கும் வகையில் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பொது அங்கத்தவர்களால் இவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இ. சுழற்சி முறையிலான தலைமைத்துவம் வரவேற்கப்படும்.

ஈ. முகாமைத்துவ/நிறைவேற்றுக் குழுக்கள் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தமது கூட்டங்களை நடாத்துவார்கள்.

உ. சங்கத்தின்(CBO) வருடாந்த பொது கூட்டத்தில் அல்லது வேறு ஏதாவது ஒரு முக்கிய கூட்டத்தில் அல்லது மாதாந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அந்த சங்கத்தின்(CBO) தீர்மானங்களைப் பதிவதற்கான புத்தகதில் பதிய வேண்டும்.

ஊ. இறுதியாக சங்கத்தின்(CBO) ஆளுகையுடன் அவற்றின் உயிர்ப்பான இயக்கமும் இருக்கும்.

1.06 முகாமைத்துவம்.

ஒவ்வொரு சங்கத்திற்கு(CBO) ஒரு முதன்மையான கட்டமைப்பு இருக்கும். சங்கத்தினையும்(CBO) ஒழுங்குபடுத்தப்பட்ட உப குழுக்களையும் பராமரிக்க ஒரு சிறப்பான கணக்கு முறைமையினை நிர்வகிப்பதற்கு பயிற்றப்பட்டதும் தேவையான ஆற்றல் மிக்க மனிதவலு இருக்கும்.

1.07 **கணக்கு முறை:**

அ. நிறுவனமானது சிறப்பான, முறையான, திருத்தமான, விபரமான மற்றும் வெளிப்படைத் தன்மைமிக்க கணக்கு முறையொன்றை நடைமுறைப்படுத்தும். குழு அங்கத்தவர்களின் சேமிப்பு கணக்குகள் முழுமையானதாகவும், விபரமானதாகவும், வெளிப்படைத் தன்மை மிக்கதாகவும் சரியானதாகவும் அத்துடன் அனைத்து கணக்குகளும் கட்டாயமாக படிமுறைப்படுத்தப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

ஆ. சங்கங்கள்(CBOs) அந் நிறுவனங்களின் நிதி நிலவரங்கள் மற்றும் கடன்கள் பற்றி கணகாணிப்பை மேற்கொள்வதற்கு தேவையான முறைமைகளையும் போதுமான தகவல்களையும் அவற்றினது நிலைமைகள் பற்றி ஆவணங்களையும் கொண்டிருக்கும்.

இ. சங்கத்தின்(CBO) நுண்கடன் தொடர்பான வளர்ச்சியை கண்காணிப்பதற்கான முறைமைகளையும், தரவுகளையும் கணக்குகளையும் நடைமுறைப்படுத்தப்பட்டு அத்துடன் தொடர்ச்சியாக செயற்படுத்தப்படும் திறமையான கணக்கு முறைகளினால் இவை சங்கங்களின்(CBO) ஒவ்வொரு நிதி ஆண்டுக்குமான அவர்களது கணக்குகளை குறித்த கணக்காய்வு கொள்கைகளுக்கு ஏற்ப கணக்காய்வு செய்யப்பட வேண்டும்.

உ. சங்கங்கள்(CBOs) SLF ற்குத் தரவுகள், ஆவணங்கள் செயற்பாடுகள் தொடர்பில் SLF இன் வேண்டுகோளின்படி வழங்கும்.

ஊ. சங்கங்கள்(CBOs) SIF இற்கு மாதாந்த/காலாண்டு நிதி அறிக்கைகளையும் ஏனைய செயற்திட்டங்கள் தொடர்பான அறிக்கைகளையும் SIF இன் தேவைக்கு ஏற்ப காலத்துக்குக் காலம் வழங்கும்.

1.08. **சங்கங்களின்CBOs) உப சட்டங்கள்.**

சங்கங்கள்(CBOs) அவற்றின் உள்ளக ஆளுகை பற்றிய கொள்கைகளை அங்கத்தவர்களினது வருடாந்த பொதுக் கூட்டத்தில் உருவாக்குவதுடன் அந்த உப சட்டங்கள் பின்வரும் வகைகள் தொடர்பான கொள்கைகளை உள்ளடக்கி இருக்கும்.

அ. அடையாளம் : பெயர், நோக்கம்

ஆ. அங்கத்தவம் : அங்கத்தவர்களின் பட்டியல் தொடர்பான நிபந்தனைகள்

இ. தலைமைத்துவம் : தலைவர்களின் பட்டியல் காலவரையறை மற்றும் கோர்தல் முறைமைகள்.

ஈ. கூட்டங்கள் : நாள், நேரம், மற்றும் இடம், வரவு மற்றும் ஒழுங்காக சமூகமளித்தல் தொடர்பான கொள்கைகள் இதனுள் தண்டப்பணம், கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல் தொடர்பான கொள்கைகள் மற்றும் கூட்டங்கள் தொடர்பான அறிக்கைகள்.

உ. கடன் வழங்கல் தொடர்பான முறைகள் : மீளச் செலுத்தும் பணத்தைச் சேகரித்தல், யார் அதனைச் சேகரிப்பது, எப்போது கொடுப்பனவுகள் பெறப்படுகின்றன, கொடுப்பணவுகள் எங்கே பெறப்படுகின்றன, யார் அவற்றை வைப்பில் இடுகின்றனர், வைப்பில் இட செய்யப்படும் போக்குவரத்துச் செலவை எவ்வாறு மீளப்பொறுவது, தகவல்களை பேணுதல்.

ஊ. பிந்திச் செலுத்தப்படும் கொடுப்பனவுகளை கையாள்வது தொடர்பிலான கொள்கைகள் : எவ்வாறு சமூக மட்டத்தில்லான உத்தரவாத்தினை உருவாக்குவது, பிந்திச் செலுத்தப்படும் கொடுப்பணவுகளுக்கான தொகையைக் கணக்கிடுதல், அங்கத்தவர்கள் கொடுப்பனவுகளை செய்ய முடியாமல் உள்ளபோது அல்லது கொடுக்காமல் இருக்கும் போது அவற்றை முகாமைத்துவம் செய்வது தொடர்பிலான படிமுறைகள்.

எ. சேமிப்புகள் : வாராந்த மிக் குறைந்த சேமிப்புகள் அவற்றைச் சேகரிக்கம் வழிகள் மற்றும் வைப்பிலிடுதல் அவற்றை ஆவணப்படுத்தல்.

ஏ. சேமிப்பு நிதியில் இருந்து கடன் பெறுதல் : யார் இவற்றைப் பெற முடியும் எக்காரணங்களுக்காக இவை பெறப்படக் கூடும், பெறுவதற்கான காலம் (அளவு, வட்டி, கால இடைவெளி, மீளச்செலுத்துகை, உத்தரவாதிகள்) நிதி வைப்புகள் தொடர்பான கொள்கைகள், இலாபப்பகிர்வுக்கான ஒதுக்கீடு, பணத்தை மீளப் பெறுதல் தொடர்பான கொள்கைகள்.

ஒ. திருத்தங்கள் : உப – சட்டங்கள் மாற்றப்படலாம் அல்லது அவற்றில் திருத்தங்கள் வருடாந்த பொதுக் கூட்டத்தில் செய்யப்படலாம். அடிக்கடி இவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவது பொருத்தமற்றது.

ஓ. கொள்கைகள் எழுதப்பட்ட பின்னர் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனத்தின் அங்கத்தவர்கள் அதனை ஒரு பெரிய தாளில் அல்லது காட்போட் அட்டையில் எழுதி அவர்களுடைய அலுவலகத்தின் சுவர் ஒன்றில் எல்லலோரும் பார்க்கும் படியாக தொங்கவிடுதல்.

ஔ. ஒவ்வொரு வருடமும் சங்கத்தின்(CBO) உப சட்டங்கள் (இற்றைப்படுத்தப்பட்ட திருத்தம் செய்யப்பட்டவைகள் அப்பிரதேச கள உத்தியோகத்தரால்) SLF இன் மாவட்ட அலுவலகத்துக்கு கையளிக்கப்படும்.

## 1.09 சங்கத்தின்(**CBO**) மாதாந்தக் கூட்டங்கள்.

சங்கத்தின்(CBO) முகாமைத்துவக் குழு/நிறைவேற்றுக் குழுக் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் நடாத்தப்பட்ட வேண்டும். சங்கத்தின்(CBO) எந்தவொரு பொது அங்கத்தவரையும் அவர்களது எந்தக் கூட்டமொன்றுக்கும் அழைக்கலாம். குழுவானது தவறிழைக்கும் குழு ஒன்றின் அங்கத்தவர்களுக்கு (கடன் மீளளித்தல் மற்றும் சேமிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் தவறுதல்) நிறைவேற்றுக் குழு/முகாமைத்துவ குழுவுடன் இணைந்து அவ் விடயத்தைக் குறித்து ஆராய அழைப்புவிடுக்கும்.
மாதாந்தக் கூட்டங்களில் குழுவானது சங்கங்களின்(CBO) முன்னேற்றம் குறித்து அதாவது அங்கத்தவர்களால் கடன் மீளச் செலுத்தப்படல், சேமிப்பு நடவடிக்கைகள் மற்றும் கடன்களின் பயன்பாடு குறித்தும் மதிப்பீடு செய்யப்படும். கடன்களை விடுத்தல் மற்றும் சேமிப்பில் இருந்து பணத்தை மீளப்பெறுதல் தொடர்பான தீர்மானங்கள் அதற்கான புத்தகத்தில் பதியப்படுவதுடன் அங்கத்தவர்கள் அதில் கையொப்பமும் இடுவர்.

## 1.10. உப-குழுக்களின் வாராந்தக் கூட்டங்கள்.

அங்கத்தவர்களின் வாராந்தக் கூட்டங்கள் குழுக்களின், சங்கம்(CBO) மற்றும் MFI என்பவற்றின் முதுகெலும்பாக இருக்கும். அவர்கள் கடன்கள் மற்றும் சேமிப்புகள், பயிற்சிகள் பெறுதல் பிரச்சனைகளுக்கான தீர்வு மற்றும் எதிர்கால செயற்பாடுகளுக்கான திட்டமிடல் என்பன தொடர்பான கண்காணிப்புக்கான குழுவை வழங்குவர். வாராந்தக் கூட்டங்கள் மிக முக்கியமானவை காரணம் இதன் போது தான் குழுவின் அங்கத்தவர்கள் அவர்களது பிரச்சனைகளைப் பற்றி கலந்தாலோசனை செய்வதுடன் அதற்கான தீர்வுகளையும் முன்வைப்பர். உப குழுக்களின் தலைவர்கள் அக்குழுக்களின் அங்கத்தவர்களினால் ஜனநாயக முறைப்படி தேர்தெடுக்கப்படுவதுடன் அத்தலைவர்களினால் அக் குழுக்கள் முகாமைத்துவம் செய்யப்படும். தலைவர் உப குழு நிலையிலும் சங்கம்(CBO) மட்டத்திலும் தமது செயற்பாடுகளை மேற்கொள்வார்கள். கூட்டங்கள் குறிப்பிட்ட இடங்களிலும் ஒரு வாரத்தின் ஒரு குறித்த நாளிலும் ஒரு குறித்த நேரத்திலும் நடக்கும்.

வாரந்த கூட்டங்கள் குழுக்களின் தலைவரினால் நடாத்தப்படும். அத்தலைவர்/தலைவி அவ்வாரத்துக்குரிய சேமிப்புகள் மற்றும் கடனுக்கான தவணைப்பணம் என்பவற்றை சேகரிப்பர். அதே நாளில் தலைவர்/தலைவி சங்கத்தின்(CBO) பொருளாளருடன் இணைந்து அந்த முழுத் தொகையையும் வைப்பிலிடுவர்.

தலைவர் சேமிப்புத் தொகையை கணக்குப் புத்தகத்தில் எழுதுவதுடன் தலைவர்/தலைவி தங்களது கையொப்பத்தையும் இடுவர். அத்துடன் தலைவர்/தலைவி கடன் தொகையின் சேமிப்பு குறித்து அந்த தொகையையும் கணக்குப் புத்தகத்தில் பதிவு செய்து தங்களது கையொப்பத்தையும் இடுவர்.

## 2.00. சங்கத்தின்(CBO) சேமிப்புத் திட்டங்கள்.

அங்கத்தவர்கள் பாதுகாப்பாகவும் ஒழுங்கான முறையிலும் உரிய கண்காணிப்பு முறைகளின் கீழ் தமது சேமிப்பினை மேற்கொள்கின்றனர் என்பதை உறுதிசெய்யும் பொருட்டு அவர்கள் கொள்கை வழிகாட்டல்களைக் கடைப்படிக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக சங்கங்கள்(CBO) தமது சொந்த சேமிப்பு மற்றும் முதலீட்டு கொள்கைகளை உருவாக்கலாம்.

## 2.01 சேமிப்பு திரட்டல்களின் முக்கியத்துவம்.

சேமிப்புகளின் திரட்டல்கள் சங்கங்களில்(CBO) சேமிப்புகள் சேர்வடையும் போதும் தலைமைத்துவம் விருத்தியடையும் போதும் உருவாகும். நிதி வலுவாக இருக்கும். ஒரு சேமிப்பு நிதியானது பல அனுகூலங்களைக் கொண்டிருக்கும்.

அ. சேமிப்புகள் அங்கத்தவர்களுக்கு தங்களுடைய நிதியினை சேகரித்துக் கொள்ள வழிவகுக்கும்.

ஆ. சேமிப்புகள் முன்னேறிச் செல்கின்ற வரவிற்கு இடமளிக்கும்.

இ. சேமிப்பு ஒழுக்கத்தை வளர்க்கும்.

ஈ. சேமிப்புகளை அவசர நிலைகளில் பயன்படுத்தலாம்.

உ. சேமிப்புக்கள் சமூகத்தின் ஒரு முதலீட்டுக்கான மார்க்கமாகக் காணப்படும்.

ஊ. சேமிப்புக்கள் தலைமைத்துவத்தை விருத்தி செய்வதுடன் இணைந்து முடிவுகளை எடுக்கும் திறமையையும் விருத்தி செய்யும்.

ஒ. சேமிப்புகள் உரிமையை விருத்தி செய்யும்.

ஓ. சேமிப்புகள் கடன்களுக்கான பாதுகாப்பை வழங்கும்.

## 2.02. கட்டாய சேமிப்பு

அ. சங்கத்தின்(CBO) ஒவ்வொரு அங்கத்தவரும் கட்டாய சேமிப்புத் திட்டத்தின் கீழ் சேமிப்பை மேற்கொள்வர். இதற்கு ஒரு குறிப்பிட்ட தொகை சங்கத்தின்(CBO) வருடாந்த பொதுக் கூட்டத்தில் அங்கத்தவர்களால் தீர்மானிக்கப்படும்.

ஆ. சங்கம்(CBO) தனக்கு இலகுவானதும் இலாபகரமானதுமான ஒரு வங்கியில் அதாவது சேமிப்புக் கணக்கை ஆரம்பித்து அதனை முகாமைத்துவம் செய்யும்.

இ. சேமிப்புகள் பெறப்பட்டு சேமிப்பு கணக்கில் சங்கத்தின்(CBO) பொருளாளரால் ஒவ்வொரு வாரமும் வைப்பிலிடப்படும்.

ஈ. சேமிப்புகளின் தொகை அதிகரிக்கும்போது சங்கத்தின்(CBO) அங்கத்தவர்கள் அத்தொகையை வேறு பயனுள்ள வழிகளில் முதலீடு செய்ய ஊக்குவிக்கப்படுவர். நிதியானது சரியான முறையில் கையாளப்படவும் ஊக்குவிக்கப்படுவர். இதனால் சேமிப்புத்தொகை காலத்துடன் அதிகரிக்கும்.

உ. எவ்வாறாயினும் சங்கம்(CBO) முதலீடாக வெளியாருக்கு கடன் வழங்க மாட்டாது.

ஊ. சங்கத்தில்(CBO) இருந்து விலகினால் அல்லது அவரது அங்கத்துவம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டால் அன்றி அங்கத்தவர்கள் அவர்களது (அவன்/அவள்) கட்டாய சேமிப்பிலிருந்து பணத்தை மீளப்பெற முடியாது. எவ்வாறாயினும் சேமிப்பு நிதியின் இறுதிக்கொடுப்பனவை நிறைவு செய்யும்போது அவர்கள் சங்கத்தின்(CBO) எல்லா நிதி தொடர்பான கடப்பாடுகளையும் முடிக்கவேண்டும்.

2.03 பங்கிற்கான சேமிப்புகள்.

அ) சேவா லங்கா கடன்களை அங்கத்தவர்கள் அணுகுவதற்கு உள்ள இன்னுமொரு கட்டாய சேமிப்பு முறையாகும். SLF இடமிருந்து சங்கம்(CBO) கடன்களைப் பெற்றுக் கொள்ள ஒரு முன் நிபந்தனையாக இருக்க வேண்டும் என்பதை பிரதிநிதித்துவப்படுத்தவே இந்த சேமிப்பு நிதிகள் இவ்வாறு வழங்கப்பட்ட வேண்டும்.

ஆ. முதலாவது கடனுக்கான அடிப்படை சேமிப்பு விதம் 10% ஆகவும் ஒவ்வொரு அடுத்துவரும் கடனுக்கான வீதம் கடன் தொகையின் 5% இனால் உயர்த்தப்பட்டதாகவும் இருக்கும். இது ஆகக் கூடுதலாக 25% வரையிலுமே அதிகரிக்கப்படும்.

இ. இவ்வகையான கட்டாய சேமிப்புகள் பின்வருவனவற்றிற்கு பயனுடையதாக இருக்கும்.

- கடன் பெறுவோருக்கு சேமிப்பின் வெகுமதியை விளக்கும் காரணியாக இருக்கும்.
- கடன்களின் மீளச்செலுத்துகைக்கான உறுதிப்படுத்தும் ஒரு மேலதிக முறையாக இருக்கும்.
- வாடிக்கையாளர்களின் சொத்துக்களை கட்டியெழுப்ப உதவும்.
- பொதுவாக கட்டாய சேமிப்பிலிருந்து பணத்தை மீழ எடுக்க முடியாது அவர்கள் பெற்ற கடன் தொகை முழுமையாக செலுத்தப்படாமல் இருக்கும் சந்தர்ப்பகளில், அனுமதிக்கப்பட மாட்டர்கள்.

### 2.04 தன்னிச்சையான சேமிப்புகள்.

அ. அங்கத்தவர்கள் அவர்களால் முடியும் அளவிற்கு கட்டாயமாக சேமிப்பிலிட வேண்டிய தொகையைவிட மேலதிகமான தொகையை சேமிக்க முடியும். இது சுய விருப்பின் பெயரில் செய்யப்படும் சேமிப்பு எனப்படும். சுய விருப்பின் பெயரில் செய்யப்படும் சேமிப்புகள் வாராந்த அல்லது மாதாந்த அடிப்படையில் இருக்க வேண்டிய அவசியமில்லை. அது தனிப்பட்ட அங்கத்தவரிடம் இருக்கும் பணப்புழக்கத்தின் அடிப்படையில் அமையலாம். அதாவது அறுவடையின் பின்னர் அங்கத்தவரிடம் சிறு தொகை மேலதிகமாக இருக்கலாம் இது சுய விருப்பின் பெயரில் சேமிப்பில் இடப்படலாம். சங்கம்(CBO) இந்த தன்னிச்சையான சேமிப்புகள் பற்றிய கணக்கு விபரங்களைப் பேணிக் கொள்ளும்.

ஆ. அங்கத்தவர்கள் அவர்களது சுயமாக செய்யப்படும் சேமிப்புகளை எந்த வேளையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

### 2.05 அவரசர சேமிப்புகள்/ஏனைய சேமிப்பு முறைகள்.

சங்கத்தில்(CBO) உள்ள அங்கத்தவர் ஒருவர் வேறு ஏதாவது ஒரு முறையில் சேமிக்க விரும்பினால் அதற்கு அவருக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டும் ஆனால் தனியான பதிவுகள் இவற்றுக்குச் செய்யப்பட வேண்டும்.

### 2.06 சேமிப்புகளை வைப்பிலிடுதல்

அங்கத்தவர்களின் சேமிப்புகள் வாராந்தக் கூட்டங்களின்போது குழுத் தலைவருடன் இணைந்து சேமிப்பில் இடப்படும். சேரிக்கப்பட்ட சேமிப்புப் பணம் வைப்புப் புத்தகத்தில் பதியப்பட்டு குழுத் தலைவரினால் கையொப்பமும் இடப்படும். குழுத் தலைவர் சேமிப்புகளை, சங்கத்தின்(CBO) பொருளாளருடன் இணைந்து (வாராந்த சேமிப்புகள், கடன்களின் தவணைப்பண மீளச் செலுத்துகை) அதே நாளில் வைப்பிலிடுவர். பொருளாளர் அதனை சங்கத்தில்(CBO) இது தொடர்பாய் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவார்.

### 2.07 சேமிப்புகளை மீள பெறுதல்

தன்னிச்சையான சேமிப்புப் பணத்தினையே அங்கத்தவர்கள் மீளப்பெற முடியும். குழுவில் மற்றும் சங்கத்தில்(CBO) இருந்து விலக்கப்பட்டால் அல்லது பதவி விலகினால் மட்டுமே கட்டாய சேமிப்புகள் மீளப்பெறப்படலாம்.

2.08 சேமிப்புகளை மீளளித்தல்.

அங்கத்துவத்திலிருந்து ஒரு அங்கத்தவர் விலக்கப்படும் போது சேமிப்புகள் அந்த அங்கத்தவருக்கு மீளளிக்கப்படும் எனினும் கடனாக அந்த அங்கத்தவர் பெற்றுக் கொண்ட தொகையை வட்டியுடன் மீளச் செலுத்த வேண்டியதுடன் வேறு ஏதாவது நிதி தொடர்பான கடப்பாடுகள் குழுவிற்கு அல்லது சங்கத்திற்கு(CBO) இருந்தால் அதனையும் அந்த அங்கத்தவர் பெற்றுக் கொண்ட கடனை அடைக்காத வரை சேமிப்பு பணம் மீளளிக்கப்பட மாட்டாது. ஒரு அங்கத்தவர் பணத்தைக் கொண்டு தான் பெற்ற கடனை மீளளிக்க முடியாத நிலையில் இருக்கும் சந்தர்ப்பங்களில் அவருடைய சேமிப்பில் இருந்து அந்தத் தொகை கழிக்கப்படும்.

2.09 பெயர் குறித்து நியமிக்கப்படடவர்.

ஒரு அங்கத்தவர் இறக்கும் பட்சத்தில் அவரது/அவளது பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் சேமிப்பினை மீளப் பெறலாம். விண்ணப்பப்படிவத்தில் பெயர் குறித்து நியமிக்கப்படுபவரின்/களின் பெயர்கள் குறிப்பிடப்பட்ட பெயர் குறித்து நியமிக்கப்படுபவர்கள் குறிப்பிடப்படும் போது ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட வேண்டிய அளவு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

2.10. சேமிப்புத் திட்டங்கள் தொடர்பான பதிவுகளைப் பேணுதல்

2.10.1 பதிவுப்புத்தகம்.

சங்கம்(CBO) தங்களது சொந்த நிதியில் இருந்து ஒவ்வொரு அங்கத்தவரின் சேமிப்பு தொடர்பான விபரங்களைப் பதிவு செய்வதற்கும் குழுக் கூட்டங்களின் போது சேகரிக்கப்படும் சேமிப்பத் தொகை அங்கத்தவர்களின் பதிவுப் புத்தகங்களின் பதியப்படும்.

2.10.2 குழுக்களிடம் இருந்து சேமிப்ப சேமிப்புகளைச் சேகரித்தல்.

ஒவ்வொரு சங்கமும்(CBO) சேமிப்புகளை சேகரிப்பதற்கு குழுக்களுக்கான சேமிப்பு மற்றும் கடன்கள் தொடர்பில் இடாப்புக்களை நடைமுறைப்படுத்தும் பொருளாளர் குழுத் தலைவரிடம் இருந்து சேமிப்புப் பணத்தைப் பெற்றுக் கொண்டவுடன் உடனடியாக அங்கத்தவர்களின் கணக்குகள் பற்றி அவர்களது கணக்குகளில் வரவு வைப்பார்.

2.10.3 காசுப் புத்தகம்.

ஒரு குழுவில் இருந்து பெறப்பட்ட சேமிப்பின் தொகை காசுப்புத்தகத்தின் வைப்புக்களுக்கான பகுதியில் பதியப்படும். மீளப் பெறப்படும் அல்லது மீளளிக்கப்படும் சேமிப்புத் தொகையானது காசுப்புத்தகத்தின் செலவுப் பகுதியில் பதியப்படுவதுடன் இது நாளாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

2.10.4. பொது பேரேடு

சேகரிக்கப்பட்ட சேமிப்புகள் பொது பேரேட்டிற்கு மாற்றப்படும். இது நாளாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு வகையான சேமிப்புத் திட்டங்களுக்கும் தனியான கணக்குகள் நடைமுறைப்படுத்தப்படும்.

2.10.5. மாதாந்த அறிக்கை.

ஒவ்வொரு சங்கமும்(CBO) ஒரு மாதாந்த கணக்கு அறிக்கையைத் தயாரித்து அதனை காசுப் புத்தகத்துடனும் பொது பேரேட்டுடனும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். சங்கம்(CBO) இவ் அறிக்கையின் ஒரு பிரதியை கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் இவ் அறிக்கையானது கள உத்தியோகத்தரால் சரிபார்க்கப்படும். அதன் பின் இவ் அறிக்கை மாவட்ட SLF பிரிவுக்கு கையளிக்கப்படும்.

3.00 நுண் கடன்.

3.01. கடன் கொள்கைகளும் சாத்தியமற்ற நிலையும்.

சங்கம்(CBO) அதன் அங்கத்தவர்களின் நிதித் தேவைகளுக்கு ஏற்பவும் சேவா லங்கா மன்றத்தின் கொள்கை வழிகாட்டல்களக்கு ஏற்பவும் அதன் கடன் வழங்கல் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும். சங்கத்தின்(CBO) கடன் கொள்கையில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ கொண்டுவரப்பட வேண்டுமானால் இன்னுமொரு வருடாந்த பொதுக் கூட்டத்திலேயே மேற்கொள்ளப்படலாம். சங்கத்தின்(CBO) கடன் கொள்கைகள் இலகுபடுத்தப்படாத அதே வேளையில் தனிப்பட்ட கடன் பெற்றவர்களின் கோரிக்கைகளுக்கு அமைய சாத்தியமற்ற நிலைக்கு வழிவகுக்காது இருக்க வேண்டும். அத்துடன் அந்நிறுவனம் எழுதப்பட்ட ஒரு கடன் கொள்கையையும் கொண்டிருக்கும். அத்துடன சங்கம்(CBO) அது நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்யும்.

3.02 அங்கத்தவர்களிடம் இருந்து கடன் பெறுபவர்களைத் தேர்ந்து எடுத்தல்.

சங்கத்தின்(CBO) அங்கத்தவர்களுக்கு நுண் கடன் நிதியில் இருந்து கடனைப் பெற்றுக்கொள்ள உரிமை உண்டு. அதாவது அந்நிதியானது சேவா லங்கா கடன் நிதியமாக இருந்தாலும் சரி, அங்கத்தவர்களின் சேமிப்பு நிதியாக இருந்தாலும் சரி அல்லது வேறு ஏதாவது இடத்தில் இருந்தாலும் சரி அவர்கள் அதில் இருந்து கடனைப் பெற்றகொள்ள முடியும். எவ்வாறாயினும் சங்கம்(CBO) பின்வரும் காரணிகளை கடன் வழங்க தேர்ந்து எடுக்கும் போது கவனத்தில் கொள்ளும்.

அ. கடந்த மூன்று மாதகாலத்துக்கு ஒழுங்கான முறையில் சேமிப்புத் தொகையை வைப்பிலிட்டு வந்த ஒரு அங்கத்தவர். மொத்த சேமிப்பு தொகையானது கடன் தொகையுடன் ஒத்திசைவானதாக இருத்தல்.

ஆ. முதலாவது கடன் அங்கத்துவம் பெறப்பட்டு மூன்று மாத காலத்தின் பின் வழங்கப்படலாம்.

இ. எல்லா அங்கத்தவர்களும் ஒரே தரத்தில் கடனைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஈ. ஒரு அங்கத்தவர் இன்னுமொரு கடனைப் பெறவேண்டுமாயின் முதல் கடனின் ஒழுங்கான மீளச் செலுத்துகையை பரிசோதிக்க வேண்டும்.

உ. கடனைப் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள செயற்பாடானது இலாபகரமானதா என்பதை கண்டறியவேண்டியதுடன் அங்கத்தவருக்கு அது தொடர்பில் முன் அனுபவம் உண்டா எனவும் அறிய வேண்டும்.

ஊ. முன்னைய கடன் மீளச் செலுத்தப்பட்ட ஒருவார காலத்தில் இன்னமொரு கடன் வழங்கப்பட வேண்டும்.

3.03 ஆரம்ப கடன் அளவு.

அ. ஒரு அங்கத்தவருக்கு ஆரம்பத்தில் ஒரு சிறிய ஆரம்ப கடன் தொகை வழங்கப்படும். அங்கத்தவரின் பொருளாதார செயற்பாடுகளை அமுலாக்குவதற்கு தேவையான வகையில் ஆரம்ப கடனின் அளவு தீர்மானிக்கப்படும். கடன் தொகையைத் தீர்மானிக்கும் போது பின்வரும் காரணிகள் கவனத்தில் கொள்ளப்படும்.

- அங்கத்தவரின் சேமிப்பு கணக்கின் சேர்கையடைந்துள்ள மீதி.
- கடன் கொடுக்கப்பட உள்ள செயற்பாட்டினால் பெறப்பட உள்ள அண்ணளவான வருமானம்.
- கடன் பெறுபவரின் உற்பத்திப் பொருளுக்கு அல்லது சேவைக்கு உள்ள சந்தை வாய்ப்புகள்.
- ஊள்ளுர் பொருளாதார நிலைமைகள்
- ஆகக் குறைந்த வருமான நிலை

ஆ. சங்கமானது(CBO) தனிப்பட்ட அங்கத்தவர்களின் சேமிப்பு மீதிகளுக்கு அமையவும் கடனின் அளவை தீர்மானிக்க முடியும்.

3.04 தொடர்ச்சியான கடன்கள்

அ. தொடர்ச்சியான கடன்கள் முதலில் பெறப்பட்ட கடன்கள் வெற்றிகரமாக மீளச் செலுத்தப்பட்டு முடிந்தவுடன் உடனடியாக வழங்கப்படும்.

ஆ. அங்கத்தவர்களின் திறமைகளுக்கு அமையவும், செயற்திட்டங்களின் சாத்தியவளங்களுக்கு அமையவும் முன்னர் பெறப்பட்ட கடன்கள் மீளச் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும் பொறுத்து இரண்டாவது மற்றும் அதன் பின்னரான கடன்கள் வழங்கப்படும்.

இ. உப குழு ஒன்றின் யாராவது ஒரு அங்கத்தவர் கடன் தொகையின் ஒரு தவணையை/கடன் தொகையை செலுத்தாது விடும் பட்சத்தில் உப குழுக்களில் உள்ள ஏனைய அங்கத்தவர்கள் அந்த தொகையானது அவர்களுடையதாகக் கருதவேண்டும். நிலுவைகளாக உள்ள கடன் தொகை மீளச் செலுத்தப்பட்டு முடிக்கப்படும் வரை ஒருவருக்கும் புதிய கடன்கள் வழங்கப்படமாட்டாது.

3.05 கடன்களிகன் கால எல்லை.

அ. ஒரு கடனின் கால எல்லையானது கடன் கொடுக்கப்படும் செயற்பாட்டைப் பொறுத்துள்ளது. குறுகிய கால எல்லைக்கான கடன்கள் ஊக்குவிக்கப்படும். குறுகிய காலக் கடன்கள் கடன் பெறுபவர்களின் நம்பிக்கையை மீளச் செலுத்துதல் தொடபில் அதிகரிப்பதுடன் அவர்களின் பணப்புழக்கத்தையும் அதிகரிக்கும். இது அத்துடன் குறிப்பிட்ட கால அளவில் அடிக்கடி முதலீட்டை மேற்கொள்ளும் வாய்ப்பினையும் அதிகரிக்கும். இவை சங்கத்திலும்(CBO) , SLF இனதும் பாதிப்பை குறைக்கும். இதனைக் கருத்தில் கொண்டு சங்கத்திற்கு(CBO) சேவா லங்கா மன்ற நிதியத்தில் இருந்து 6 தொடக்கம் ஒரு வருட காலத்துக்கு கடன் வழங்கப்படும்.

ஆ. மீன்பிடி, விவசாயாயம் மற்றும் ஏனையவைகளுக்கான கடன்கள் 6 மாதம் வரையில் வழங்கப்படும். கடனுக்கான வட்டி மாதாந்த தவணை அடிப்படையில் மீளச் செலுத்தப்பட முடியும். கடனின் மொத்தத் தொகையானது (முதல்) ஆறுமாத கால முடிவில் செலுத்தப்படலாம். அதே வேளையில் சிறிய வர்த்தகத் துறைகளுக்கான கடன்கள் ஒரு வருடத்திற்கு வழங்கப்படலாம். அத்துடன் அது சமமான 12 தவணைகளில் வட்டியும் முதலுமாக செலுதப்படலாம்.

3.06 கடனுக்கான வட்டி.

அ. சங்கம்(CBO) அதனுடைய அங்கத்தவர்களுக்கு விதிக்க வேண்டிய வட்டித் தொகையைத் தீர்மானிக்கும். ஆனால் எல்லா அங்கத்தவர்களுக்கும் ஒரே அளவான வட்டி வீதமே அறவிடப்படும்.

ஆ. சங்கங்கள்(CBOs) தாம் பெறும் கடன்களுக்கு வர்த்த ரீதியில் பெறப்படும் வீதத்தை விட உயர்வான வட்டி வீதத்தை செலுத்த வேண்டியதுடன் இந்த வட்டி வீதம் பணத்தை கடனாகக் கொடுக்கும் ஏனைய நிறுவனங்கள் அறவிடும் வட்டி வீதத்தை விட குறைவானதாகவும் இருக்கும்.

இ. வட்டி வீதத்தினைத் தீர்மானிக்கும் போது சங்கங்கள்(CBOs) அவற்றின் செயற்பாடுகளுக்கான செலவு, நிதிச் செலவு என்பவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டியதுடன் அதனை ஒரு இலாபகரமான நிறுவனமாக இயங்கச் செய்வது குறித்தும் கருத்தில் கொள்ள வேண்டும்.

3.07 கடனுக்கான உத்தரவாதம்.

சங்கம்(CBO) அவர்களுடைய அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கும் போது உத்தரவாதிகளை கோர வேண்டிய அவசியமில்லை. ஒரு உபகுழுவில் உள்ள சக அங்கத்தவர்கள் உத்தரவாதிகளாக அங்கததவர்கள் பெறும் கடன்கள் தொடர்பில் செயற்படுவர்.

3.08 கடன் விண்ணப்பத்தின் கோட்பாடுகள் மற்றும் அனுமதியுடன் கடனை வழங்கலும்.

அ. வினைத்திறன் உள்ள முறையில் கடன் விண்ணப்பங்களைத் தயாரித்தலும் அவற்றை முடிவு செய்தலும், அவற்றை வினைத்திறன் உள்ள முறையில் கடன்களை விடுத்தலும் நுண் கடன் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களின் நீடித்து நிற்கும் தன்மையுடன் ஒருங்கிணைந்த ஒன்றாக இருக்கிறது. சங்கத்தின்(CBO) கடன் கொள்கை மூன்று முக்கிய கோட்பாடுகளின் அடிப்படையில் தங்கியுள்ளது. அதாவது உரிமைத்துவம், வெளிப்படைத்தன்மை மற்றும் கால வரையறைகள் மற்றும் இலகுவான தன்மை.

ஆ. சங்கம்(CBO) ஒன்றின் அங்கத்தவர்களுக்கு கடன் பணம் கிடைப்பது வரையில் மூன்று படிகளில் செயற்பாடுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

- கடன் விண்ணப்பம் (அங்கத்தவராதல்)
- கடன் அனுமதி (சங்கத்தின்-CBO நிறைவேற்று/முகாமைத்துவ குழு
- கடன் வழங்கல் (சங்கத்தின்-CBO பொருளாளர்).

3.09 கடன் விண்ணப்பம்.

சங்கம்(CBO) எளிமையான நியமமமான ஒரு விண்ணப்பபடிவத்தை இதற்காகக் கொண்டிருக்கும். குழுவில் இணைந்து 6 வார காலத்தின் பின் ஒரு அங்கத்தவர் மேற்குறித்த விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து கொடுப்பதன் மூலம் கடனுக்கு விண்ணப்பிக்கலாம். தலைவர் அவருடைய குழு அங்கத்தவர்களுக்கு (அவருக்கு/அவளுக்கு) விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்ய உதவி புரிவர். விண்ணப்படிவம் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டு வாராந்தக் குழுக் கூட்டத்தின் போது தலைவரிடம் அங்கத்தவரால் சமர்ப்பிக்கப்படும். அக்குழு இந்த விண்ணப்பத்தை மதிப்பீடு செய்யும். குழு இவ் விண்ணப்பம் தொடர்பில் தனது நிறைவை தெரிவிக்கும் பட்சத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு கடனுக்கான அனுமதி கொடுத்தல் தொடர்பான செயற்பாடுகள் ஆரம்பிக்கும். சங்கத்தின்(CBO) பொருளாளரிடம் குழுவின் தலைவர் கடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பார். பொருளாளர் இவற்றை நிறை வேற்று/முகாமைத்துவ/கடன் குழக்களின் அனுமதிக்காக அவற்றைக் கையளிப்பார்.

இதில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதானது உபகுழுவின் ஏனைய அங்கத்தவர்கள் கடன் விண்ணபத்தில் கடனுக்கான உத்திரவாதிகளாக கையொப்பமிடுவர். ஏதாவது ஒரு அங்கத்தவர் (அவரது/அவளது) கடனை செலுத்தத் தவறும் பட்சத்தில் உத்திரவாதிகள் அந்தக் கடனைச் செலுத்தக் கடப்பாடு உடையோராவார்.

3.10. கடனுக்கான அனுமதி.

கடனுக்கான அனுமதிக்கு முன் எல்லா விண்ணப்பப் படிவங்களும் மீளாய்வு செய்யப்படுவதுடன் அதைத்தொடர்ந்து மேலதிகமாக நிறைவேற்று/முகாமைத்துவ குழுக்களின் கலந்துரையாடல் மற்றும் அனுமதி என்பவற்றுடன் வழங்கப்படுகிறது. நிறைவேற்று/முகாமைத்துவ குழு அவர்களது மீளாய்வு செய்யும் அதிகாரத்தை சங்கத்தின்(CBO) கடன் குழுவிற்கு (ஏதாவது எனில்) வழங்க முடியும். கடன் குழுவானது ஆகக் குறைந்தது மூன்று சங்க(CBO) அங்கத்தவர்களைக் கொண்டிருக்க வேண்டும். இவர்கள் வருடாந்த பொதுக்கூட்டத்தில் தேர்ந்து எடுக்கப்படுவர்.

3.11. கடன்களை மீளாய்வு செய்தல்.

i. கடன் விண்ணப்பத்திற்கு அனுமதி அளிக்கப்படுமா என்பது கடன் குழுவின் நல்ல தீர்ப்பு, முடிவாக முழுவதுமாக தீர்மாணிக்கும். எவ்வாறாயினும் சங்கத்தினால்(CBO) வரையறைசெய்யப்பட்டுள்ள கட்டமைப்பிற்குள் தீர்மாணங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் SLF இன் நிதி வழங்கலுக்கான வரையறைக்குள்ளும் இடம்பெறும். கடன் விண்ணப்பத்தினை முடிவுசெய்வதற்கான அடிப்படைக் காரணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- விண்ணப்பதாரியின் நடத்தை
- விண்ணப்பதாரியின் வியாபாரம் தொடர்பான அநுபவமும் திறமையும்
- வியாபாரத்திட்டத்தின் அல்லது முதலீட்டுத் திட்டத்தின் சாத்தியத்தன்மை.

ii. கடன் குழுவானது கோரப்படும் கடன் தொகையானது நிதிவழங்கு நிறுவனங்களால் தீர்மாணிக்கப்படும் கடன் எல்லைக்குள் இருக்கின்றதா எனவும் உறுதிப்படுத்திக் கொள்ளும்.

iii. சங்கத்தின்(CBO) பொருளாளர் கடன் குழுவிற்கு மீளாய்வு செய்யப்பட்ட குழு அங்கத்தவர்களின் கடன் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பார். இறுதியாக கடன் குழு மேற்கொள்ளும் கூட்டமொன்றில் பங்குபற்றி அங்கத்தவர்களுக்கான எல்லாக் கடன்களையும் மதிப்பீடுசெய்து அனுமதி வழங்கும்

iv. இந்தச் செயல்பாடுகள் சங்கத்தின்(CBO) தீர்மாணங்களுக்கான புத்தகத்தில் பதிவு செய்யப்படும்.

v. சங்கத்தின்(CBO) தலைவரால் அல்லது செயலாளரால் தனிப்பட்ட கடன் விண்ணப்பங்கள் கையெழுத்திடப்படும்.

### 3.12 கடன் தொகையை வழங்கல்

கடனுக்கான அனுமதி வழங்கப்பட்டபின் சங்கத்தின்(CBO) பொருளாளர், கடன் தொகையை, பெறப்படும் சேகரிப்புப் பணத்தில் இருந்து அல்லது வங்கியில் இருந்து பணத்தைப் பெற்றுக்கொள்வதன் மூலம் வழங்குவார். கடன் தொகையானது சேவா லங்கா மன்றத்தின் கழ உத்தியோகத்தர் முன்னிலையில் கடன் தொகை விடுவிக்கப்படும் (வழங்கப்படும்). கடன் பெறுபவரின் வைப்புப் புத்தகத்தில் இதற்கான அவசியமான பதிவு மேற்கொள்ளப்படும். சங்கத்தின்(CBO) அலுவலகத்தில் கடன் விடுவித்தல் தொடர்பான முதன்மைப் பதிவுகள், விண்ணப்பப்படிவம், வாக்குறுதிப் பத்திரம் என்பன பத்திரப்படுத்தி வைக்கப்படும்.

### 3.13 கடன் வழங்கலுக்கான கால எல்லை.

குறித்தகால எல்லைக்குள் கடன் வழங்கலுக்கான செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும்போது அது கடன் பெறுபவர்களை உற்சாகப் படுத்துவதுடன் நேரகாலத்துக்கான மீள் செலுத்துகையையும் ஊக்குவிக்கும். அத்துடன் நிதியியல் ரீதியாகவும் CBOக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் நன்மைபயப்பதாக இருக்கும். மீளாய்வு செய்வது தொடக்கம் அனுமதி வழங்குதல் வரையான எல்லா செயல்பாடுகளும் ஒரு வார காலத்துக்குமேல் எடுக்காது.

### 3.14 நிலுவை / தவறான கடன் முகாமைத்துவம்

ஒவ்வொரு சங்கமும்(CBO) கடன்கள் தொடர்பான நிலுவைகளை முகாமைத்துவம் செயவது தொடர்பில் தமது சொந்த கொள்கையை ஏற்படுத்தும். இந்தக் கொள்கை தவணைக்கொடுப்பனவுகள் தவறவிடப்படுவது தொடர்பில் கண்டுபிடிக்கப்பட்டவுடன் உடனடியாக எடுக்கப்பட படிமுறைகளையும் தெளிவாக உள்ளடக்கி இருக்கும். சங்கம்(CBO) முழுமையற்ற தவணைக் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ள மாட்டாது. கடன் நிலுவைகள், நிலு ஆரம்பித்த தொடர்பில் உடனடியாக செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக சங்கத்தில்(CBO) உபகுழு ஒன்று செயல் அணியாக செயல்பட்டு தங்களுடைய சொந்த அங்கத்தவர்களுக்கு இடையில் தவணைக் கொடுப்பனவுகளை செலுத்தாமல் இருப்போர் தொடர்பிலான பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். சங்கத்தின்(CBO) பொருளாளரிடம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட முன் கொடுக்கப்படாத நிலுவையை உபகுழுவின் ஏனைய அங்கத்தவர்கள் சேகரித்து அதனையும் சேர்த்து கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டும்.

உபகுழுவின் ஒரு அங்கத்தவர் மீளக்கொடுப்பனவை கொடுக்க முடியாது என்று கூறும் பட்சத்து அந்த உபகுழுவின் ஏனைய அங்கத்தவர்கள் சமமான அளவு தொகையை இட்டு அந்த நிலுவையை அல்லது செலுத்தப்படாத தொகையை செலுத்த வேண்டும். உரிய காலத்தில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுவதை ஊக்குவிக்க பிந்திச் செய்யப்படும் கொடுப்பனவுகளுக்கு ஒரு தண்டப் பணத்தை விதிக்கலாம். எவ்வாறாயினும் இந்தத் தொகையானது அவ்வாறான சந்தர்ப்பங்களில் பணத்தை செலுத்த தவறுவோர் இடத்தில் இருந்தே அறவிடப்படும். சேகரிப்பை மேற்கொள்ள முடியாதுபோகும் பட்சத்தில் அந்த நிலுவை தொகையை உபகுழுவின் ஏனைய எல்லா அங்கத்தவர்களின் சேமிப்பு நிதியில் இருந்தும் விகிதாசார முறையில் கழிக்கப்படும். முதலில் செலுத்தப்பட்ட கடனை திருப்பிச் செலுத்தாதவரை ஒருவருக்கும் தொடர்ச்சியான கடன்கள் கொடுக்கப்படமாட்டாது.

## 4.0 வங்கிக் கணக்குகளும் அதனுடன் தொடர்புடைய வழிகாட்டல்களும்.

### 4.01 வங்கிக் கணக்குகள்

ஒவ்வொரு சங்கமும்(CBO) அதனுடைய பெயரில் அவர்களுடைய நிறுவனத்துக்கு அருகாமையிலுள்ள வங்கி ஒன்றில் இரண்டு வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்க வேண்டும். ஒரு கணக்கு அங்கத்தவர்களின் சேமிப்புகளை வைப்பிலிடுவதற்காகும். இது ஒரு சேமிப்பு கணக்காக இருக்கும். மற்றையது ஒரு நடைமுறைக் கணக்காக இருக்கும் இதனூடாக சேவாலங்கா சமூக நிதி கம்பனியினூடான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளுவதற்காகவும் ஆகும்.

### 4.02 வங்கிக் கணக்குகளின் செயல்பாடுகளும் கையெழுத்து இடுபவர்களை மாற்றுவதும்.

தலைவர், செயலாளர், பொருளாளர் என்பவர்களே இந்த வங்கிக் கணக்குகளுக்கு கையெழுத்திடுபவர்களாக இருப்பர். இந்த கணக்குகள் இரண்டு பேர் கையெழுத்திடுவதன் மூலம் செயற்படுத்தப்படலாம். அவற்றில் ஒருவர் பொருளாளராக இருக்க வேண்டும்.

### 4.03 காசோலை புத்தகத்தை வைத்திருப்பவர்.

சங்கத்தினால்(CBO) தீர்மாணிக்கப்பட்ட ஒரு அங்கத்தவராலோ / ஒரு முகாமையாளராலோ காசோலை புத்தகம் பாதுகாக்கப்படலாம் ஆனால் அந்த குறிப்பிட்ட நபர் கையெழுத்திடுபவராக (வங்கிக் கணக்குகளில்) இருக்கக் கூடாது.

சங்கத்தின்(CBO) முகாமையாளர் / ஏனைய அங்கத்தவர் (வங்கிக் கணக்குகளில் கையெழுத்திடுவோரைக் தவிர ஏனையவர்கள்) அவர்களுடைய கட்டுப்பாட்டில் காசோலைப் புத்தகத்தை வைத்திருப்பர். தனியான காசோலைத் தாளைப் பயன்படுத்துதல் மிகவும் கடுமையான முறையில் தடைசெய்யப்படும். ஒரு காசோலைப்புத்தகம் முடிவடைந்த பின்னர் இன்னுமோர் காசோலைப்புத்தகம் வங்கியில் இருந்து பெறப்படலாம். காசோலைப்புத்தகத்தை வங்கியில் இருந்து பெற்றுக்கொள்ளும் போது பொருளாளர் அதன் தாள்களின் எண்ணிக்கையை அளவிட்டு அதனை முகாமையாளரிடம் / அதற்குரியவரிடம் கொடுக்கவேண்டும். எல்லா தாள்களும் முடிவடைந்த பின் அவற்றின் காசோலைப் புத்தகத்தின் அடிக்கட்டைகள் பொருளாளரிடம் சமர்பிக்கப்படவேண்டும். பொருளாளர் இவற்றை ஆகக் குறைந்தது இரண்டு வருடங்களுக்கு பாதுகாத்து வைப்பர்.

### 4.04 பணத்தை மீளப்பெறுதல்.

பணத்தை மீளப்பெறுவதற்கு ஒரு காசோலையை எழுதுவதற்கு முன் முகாமையாளர் / உரிய அங்கத்தவர் மீளப்பெறப்படவேண்டிய தொகையை உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பத்தையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் சரிபார்த்து கொள்வார். காசோலைகளில் முதலிலேயே கையெழுத்திடுதல் மிகவும் கடுமையாக தவிர்க்கப்படும்.

தலைவர் பொது பேரேட்டில் மீதியை பரிசோதித்தபின் கையெழுத்திடுவார்.

முகாமையாளர் / பொருளாளர் வங்கியின் கணக்கு அறிக்கையினையும் / வைப்புப்புத்தகத்தையும் பொது பேரேட்டில் ஒழுங்கு முறையாக சரிபார்த்துக் கொள்வர். சங்கத்திற்கு(CBO) கழ உத்தியோகத்தர் விஜயம் செய்யும் போது சங்கத்தினது(CBO) புத்தகங்களையும் கணக்குகளையும் பரிசோதிக்க வேண்டும். மேலும் காசுபுத்தகத்தில் அவரது கையொப்பத்தையும் இடவேண்டும். பிரதிப் பணிப்பாளர் (நுண்கடன்) சங்கத்திற்கு(CBO) விஜயம் செய்யும்போது அந்நிறுவனத்தின் புத்தகங்களையும் கணக்குகளையும் பரிசோதிப்பார்.

### 4.05 பணத்தைக் கையிருப்பில் வைத்திருத்தல் பொறுப்பு.

பொதுவாக சங்கம்(CBO) கையில் பணத்தை வைத்திருக்காது அப்படி தேவை ஏற்படும் பட்சத்தில் சங்கத்தின்(CBO) பொருளாளர் மூடிய அலுமாரி ஒன்றில் அப்பணத்தை அவரது பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டும்.

### 4.06 ரசீது (பணம் செலுத்தப்பட்டதற்கு கொடுக்கப்பட்ட).

சங்கத்தின்(CBO) எல்லா ரசீதுகளும் அந்நிறுவனத்தின் (சங்கம்-CBO) அலுவலகத்தில் பாதுகாக்கப்படவேண்டும்.

5.0 சங்கத்தின்(CBO) புத்தகங்களும் கணக்குகளும்.

5.01 சங்கத்தின்(CBO) செயலாளரினால் வைத்திருக்கப்பட வேண்டிய புத்தகங்களும் ஆவணங்களும்.

அ. தீர்மானங்கள் / கூட்டறிக்கை புத்தகங்கள் (வருடாந்த பொதுக் கூட்டங்கள் / சங்கத்தின்(CBO) மாதாந்த கூட்டங்கள் / நிறைவேற்று பொதுக்குழு கூட்டம்/ நிறைவேற்றுக் குழுகூட்டங்கள்).

ஆ. சங்கத்தின்(CBO) அதற்கான அங்கத்துவ விண்ணப்பம் - பின்னினைப்பு – 6.

இ. அங்கத்தவர்களின் சமூக மற்றும் பொருளாதார தரவுகள்.

ஈ. சங்கத்தின்(CBO) யாப்பு.

உ. சங்கத்தின்(CBO) உப-கூட்டங்கள்.

5.02 பொருளாளரிடம் அல்லது முகாமையாளரிடம் வைத்திருக்கப்பட வேண்டிய புத்தகங்கள்.

அ. காசுப்புத்தகம்
ஆ. பொது பேரேடு
இ. சேமிப்பு பேரேடு
ஈ. கடன் பேரேடு
உ. காசோலைகளை வழங்குவதற்கான இடாப்பு.
ஊ. சேமிப்பு மற்றும் வரவு தொடர்பான இடாப்பு. (பின்னிணைப்பு – 1)

5.03 பொருளாளரிடம் அல்லது முகாமையாளரிடம் இருக்க வேண்டிய விண்ணப்பப்படிவங்களும் அவற்றின் அமைப்பு முறைகளும்.

அ. கடன் விண்ணப்பப்படிவம் (பின்னிணைப்பு – 2)
ஆ. உறுதிப் பத்திரம் (பின்னிணைப்பு – 3)
இ. கடன் உடன்படிக்கை (பின்னிணைப்பு – 4)
ஈ. கடன் வழங்கல் தொடர்பான மூல ஏடு (பின்னிணைப்பு–5)
உ. சேமிப்புதாள் / பணப்பற்றுச் சீட்டுக்கள் (சேமிப்புகளும் கடன்களும்)

5.04 சங்கத்தின்(CBO) தனிப்பட்ட அங்கத்தவர்களினால் வைத்திருக்கப்பட வேண்டிய புத்தகங்கள்.

அ. கடன்கள் மற்றும் சேமிப்புக்கான வைப்புப்புத்தகங்கள்.
ஆ. காசுக்கான பற்றுச் சீட்டுக்கள்.

5.05 சேமிப்புகளும் வரவு இடாப்பும் (பின்னிணைப்பு – 1)

இந்த இடாப்பானது ஒருகுழுவிலுள்ள மொத்த அங்கத்வர்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது. அத்துடன் வாராந்த கூட்டங்களில் அவர்களின் வரவுகள் ஒவ்வொரு அங்கத்தவர்களும் சேமிப்புக்கள் தொடர்பில் செலுத்த வேண்டிய அளவையும் குறித்து நிற்கும். குழுக்கூட்டங்களுக்கு அங்கத்தவர்களின் வருகையின் வீதம் அதிகமாக ஒழுங்காக இருப்பதென்பது சங்கத்தின்(CBO) உச்ச அளவிலான செயற்பாட்டைக் காட்டுகின்ற ஒரு முக்கிய குறிகாட்டியாக உள்ளது.

5.06 தனிப்பட்ட கடன்களும் சேமிப்புப்புத்தகங்களும்.

தனிப்பட்ட கடன்களுக்கான புத்தகங்கள் கடன் கோரப்பட்ட நோக்கத்தினையும் அந்த கடன் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதனையும், கடனின் உண்மையான அளவு என்ன என்பதனையும் கடனில் மீதமாகச் செலுத்தப்படவேண்டிய அளவு குறித்தும் ஏனையவை குறித்தும் அறியக்கூடியதாக உள்ளது. அதேவேளையில் தனிப்பட்ட சேமிப்புப்புத்தகங்கள் ஒரு தனி அங்கத்தவரிடம் எவ்வளவு வருமானம் பெறப்படுகின்றது என்பதனையும், எவ்வளவு வட்டி சேமிப்புக்கு கிடைக்கிறது என்பது பற்றியும் சேமிப்பில் இன்னும் எவ்வளவு நிலுவையாக உள்ளது என்பது பற்றியும் ஏனையவை பற்றியும் அறியக்கூடியதாக இருக்கும்.

5.07 கடன் விண்ணப்பப்படிவம்.

இந்த விண்ணப்பப்படிவத்தில் கடனுக்காக விண்ணப்பித்தவர்கள் தொடர்பில் குழுக்களின் தீர்மானம் / சிபாரிசுகள் என்பன உள்ளடக்கப்பட்டு இருப்பதுடன் கடனுக்காக விண்ணப்பித்து இருப்பவர்கள் பற்றிய தகவல்களும் மேலதிக விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

5.08 கடன் உடன்படிக்கைபடிவம்.

கடனைப்பெறுவதற்கு முன் எல்லா கடன் பெறுனர்களும் இந்த உடன்படிக்கைப் படிவத்தைப் பூர்த்திசெய்ய வேண்டும். இந்தப்படிவம் கடனின் தொகை, சேவைக்காக அறவிடப்படும் கட்டணத்தின் அளவு, மீளச்செலுத்துதலின் தன்மை மற்றும் தவணைகள் பற்றியும் ஏனையவைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கும். கடன் பெறுனர்களும் சாட்சிகளும் இந்தப்படிவத்தில் கையெழுத்திடுவர். சங்கம்(CBO) இந்தக் கையெழுத்துக்களை அங்கத்துவப் படிவத்துடன் சரிபார்க்கும்.

5.09 கடன் விடுவித்தல் தொடர்பான முதன்மை ஆவணம்.

இந்த இடாப்பானது கடன்களைப்பற்றிய தகவல்களையும் அங்கத்துவ ரீதியாகவும் நாள்ரீதியாகவும் கடன்கள் விடுவிக்கப்பட்ட தகவல்களை கொண்டிருக்கும்.

5.10 காசுப் புத்தகம்.

மேற்கொள்ளப்படும் சகல கொடுக்கல் வாங்கல்களும் நாளாந்தரீதியில் பதிவுசெய்யப்பட வேண்டும். காசுப்புத்தகமானது பொருளாளரினால் ஒவ்வொரு நாளும் மூடப்பட (கணக்குகள் முடிக்கப்பட) வேண்டும் என்பதுடன் ஏடுகளின் பதிவுகள் வங்கியறிக்கைகளுடன் ஒத்துச் செல்கிறதா என சரிபார்க்கப்படவும் வேண்டும். கள உத்தியோகத்தர் அவரது மாதாந்த விஜயத்தின் போது அவரது கையெழுத்தை அதில் இடுவார்.

